ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/18 - 2018 නොවැම්බර් මස 05 වැනි සඳුදා - 2018.11.05

*2096/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு, அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் பொறுப்பளிக்கப்படும் அமைச்சுக்களும், அதன் விடயங்களும், பணிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், 2018 நவெம்பர் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இதன்கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொல்லப்பட்ட அமைச்சின் விடயங்களும் பணிகளும், சொல்லப்பட்ட அமைச்சுகளுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியனவும் இருக்குமென என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**மைத்திரிபால சிறிசேன,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2018, நவெம்பர் 05.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

(1) **தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் விடயம் தொடர்பில் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் (அமைச்சரவையின் பணியை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும்) | • (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) காணாமல்போனோர் பற்றிய அலுவலக (தாபித்தல், நிருவாகம் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் ) சட்டம் |
| 2. இலங்கையின் தனித்துவத்தினை மேம்படுத்துவதற்காக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை மேம்படுத்தும் நோக்கிலான கொள்கையைத் தயாரித்தல் | 2. காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் | • (1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்பு சட்டம் |
| 3. நீடுறுதியான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தேசிய ஒற்றுமை, சகவாழ்வுக்கு தேவைப்படும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | 3. முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்கள் |
| 4. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளின்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | | |
| 5. அவ்வாறான பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளைத் தேடுவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்போது அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் | | |
| 6. சகலரும் பங்கேற்கும்வகையில் ஒற்றுமையுடனான சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கும் சகவாழ்வினை மேம்படுத்தும்பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் | | |
| 7. களமட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் மதிப்பிடலும் | | |
| 8. பல்வேறு சமூகங்களுக்குள்ளும் மற்றும் இடையிலும் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் மற்றும் மோதல்களுக்கான அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசுக்கு முன்மொழிதல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துதல் தொடராய்வு செய்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(1) **தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. சமூகத்துக்குள்ளும் மற்றும் இடையிலும் மோதல் நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங்காணுதல் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களை இணக்கப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துதல் மற்றும் சிபார்சுகளைச் சமர்ப்பித்தல் | | |
| 10. மேலே 1 இல் சொல்லப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ற வகையில் கல்வி, சட்டம், அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார விடயங்கள் உள்ளடங்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொடராய்வினை செய்தல் | | |
| 11. தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கருத்துக்கள் மற்றும் பங்குபற்றுதல்களைப் பெற்றுக்கொள்ளும்முகமாக அரச, வர்த்தக சமூகம் மற்றும் அரசசார்பற்ற துறையினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் | | |
| 12. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளைச் செயற்படுத்துதல் தொடர்பான பணிகளில் தேவைப்படும்போது தலையிடுதல் | | |
| 13. நிதிரீதியான உதவிகள் மற்றும் விசேட நிபுணத்துவங்களைப் பெற்றுக் கொள்ளும்முகமாக சர்வதேச சமூகத்துடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் | | |
| 14. பொருத்தமான முறைகளைப் பின்பற்றி தேவைப்படின் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காக நிதியங்களைப் பெற்றுக்கொள்ளல் | | |
| 15. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போனோர் பற்றிய அலுவலகச் (தாபித்தல், நிருவாகம், மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல்) சட்டத்துக்குரித்தான சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| 16. ஒழுக்கப் பண்பாடுடைய சமூகம் ஒன்றினை உருவாக்குவதற்காக மக்களிடையே சமயங்களின் பெறுமதிகளை வளர்ப்பதற்கான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(1) தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 17. முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் தொடராய்வு செய்தலும் | | |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(2) இளைஞர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. இலங்கை மகளிர் பணியகம் | • (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம் |
| 2. மகளிரின் வாழ்வின் பண்புத்தரத்தை உயர்த்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 2. மகளிர் தொடர்பான தேசிய குழு | • தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) |
| 3. அரசாங்க அலுவல்களின்போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | 3. நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் | • (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம் |
| 4. மோதல்களினாலும் வறுமையினாலும் விபத்துக்குள்ளான குழுக்களை முக்கிய நோக்காகக்கொண்டு பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தலும் ஆண், பெண் இருதரப்புக் கிடையே சமநிலையையும் நியாயத்தையும் ஏற்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கை களை எடுத்தலும் | 4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | • (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் |
| | 5. சிறுவர் செயலகம் | • (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவைப் பேரவைச் சட்டம் |
| | 6. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | • (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம் |
| | 7. இளைஞர் படையணி | |
| | 8. தேசிய இளைஞர் விருது வழங்கல் அதிகாரசபை | |
| | 9. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு நிறுவனம் | |
| | 10. தலைமைத்துவ அபிவிருத்தி தொடர்பான தேசிய மத்திய நிலையம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2)* இளைஞர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 5. மகளிர் மற்றும் சிறுவர்மீதான துன்புறுத்தல்களை தவிர்ப்பதற்காக சட்ட மற்றும் கொள்கைகளை வலுவூட்டுவதும் செயற்படுத்துதலும் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 6. மகளிரை அடிப்படையாகக் கொண்ட வீட்டு அலகினைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்துதலும் | | |
| 7. நிலைபேறான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல் | | |
| 8. மகளிர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல் | | |
| 9. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள ஒரு பிள்ளையை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர்பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும், மாகாணமட்ட குழுக்களுடன் அத்தகைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும், தொடர்பிணைத்தலும் மற்றும் கண்காணித்தலும் | | |
| 10. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளை தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு உயர்ந்த மட்டத்தில் வைத்துப் பேணுவதுடன், அத்தகைய சிறுவர்களுக்கு சமவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் | | |
| 11. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப் படுத்துதல் | | |
| 12. சிறுவர் பாதுகாப்பு நிலையங்களின் ஒழுங்குறுத்துகை | | |
| 13. செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) இளைஞர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 14. இளைய பரம்பரையினர் சரியான திசையில் செல்வதை நோக்காகக் கொண்ட எண்ணங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்துதலும் | | |
| 15. இளந்தலைமுறையினரை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | | |
| 16. வேலையற்ற இளைஞர்கள் மத்தியிலுள்ள திறனை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 17. இளைஞர் அமைப்புகள் தொடர்பான செயற்பாடுகள் | | |
| 18. இளைஞர்களுக்கான தொண்டர் சேவைத் திட்டங்களை வகுத்தமைத்தல் | | |
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 20. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(3) வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. தகவல் திணைக்களம்<br>2. இலங்கை பத்திரிகைப் பேரவை<br>3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>4. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்<br>5. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு | • (1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(3) வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. மக்களது உளப்பாங்குகளை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக் கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பிற்குத் தேவையான திறமுறைகளை வகுத்தமைத்தல்

3. மக்களிடையே அறிவு, உளப்பாங்குகள் மற்றும் நல்ரசனை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்

4. சரியான தகவல்களை அறிந்து கொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல்

5. உயர்தரத்திலான ஊடக ஒழுக்கத்தினை ஏற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

6. அரசாங்க உத்தியோகபூர்வ அறிவித்தல் கள் மற்றும் செய்திகளை வெளியிடு வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்

7. இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்

8. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூத ராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவை களையும் வழங்குதல்

9. வெளியீடுகளுக்குரிய சர்வதேச ஒப்பந்தங்களையும் சமவாயங்களையும் நடைமுறைப்படுத்துதல்

10. திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக அலுவல்கள்

11. செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

6. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி

7. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்

8. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்

9. மஹிந்த ராஜபக்ஸ தேசிய ரெலி சினிமா பூங்கா (ரன்மிஹிதென்ன)

10. தகவல் அறியும் உரிமைபற்றிய ஆணைக்குழு

11. சகல தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்

12. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்
- (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தகவல் அறியும் உரிமைபற்றிய சட்டம்
- தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் (2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க)
- இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் (2006 ஆம் ஆண்டின்19 ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3)* வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 12. வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகள் மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள் | | |
| 13. அரசத் துறை சேவை வழங்குதலில் செயல்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உரிய தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்குதல் | | |
| 14. கணினி அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத் துதல் | | |
| 15. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதற்கான திறமுறைகளை வகுத்தமைத்தல் | | |
| 16. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங் களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 17. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.